**2.3.2023**

**ருத்ரா (எ) காயத்திரி**

**எச்.எம்.ஓ.பி..எண். 228/18**

**குறுக்கு விசாரணை—**

எங்களுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரி. திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் திருவொற்றியூரில் தனியாக தங்கி இருந்தார் என்றால் சரி. அசோக் லைலேண்ட் நிறுவனத்தில் இருந்து சப் காண்ட்ராக்ட் எடுத்து நடத்தும் நிறுவனத்தில் எதிர்மனுதாரர் மேலாளராக பணிபுரிந்தார் என்றால் சரியல்ல. வாட்ச்மேனாக தா்ன இருந்தார். எதிர்மனுதாரர் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக அவர் வாட்ச்மேன் வேலை செய்தார் என்று நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு நான் 10ம் வகுப்பு வரை படித்து இருந்தேன். திருமணத்திற்கு பிறகும் நான் எதுவும் படிக்கவில்லை என்றால் சரி. திருமணத்திற்கு முன்பும் திருமணத்திற்கு பின்பும் எதிர்மனுதாரரை பிரிந்து வரும் வரையில் நான் எந்தவித வேலைக்கு செல்லவில்லை என்றால் சரி. திருமணத்தின் போது எதிர்மனுதாரர் என்ன படித்து இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது இப்போதும் எனக்கு தெரியாது. என் அப்பாவோ என் அணண்னோ அவர் என்ன படித்து இருக்கிறார் என்ற விவரம் கூறவில்லை வாட்ச்மேனாக வேலை செய்யும் விவரம் மட்டும் கூறினார்கள் பெரியோர்கள் கூறியதால் நான் திருமணம் செய்துகொண்டேன். திருமணத்தின் போது எதிர்மனுதாரர் பற்றிய அனைத்து விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் கூறியுள்ளது போல் திருமணத்தின் போது 100 சவரன் நகை 5 கிலோ வெள்ளி நகைகள் டாடா சுமோ கார் ஆகியவை கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு நான்

கூறியுள்ளளவிவரம் தவறு என்றாலும் சரியல்ல. திருமணத்தின் போது எதிர்மனுதாரர் எதாவது கட்சியில் இருந்தாரா என்றால் பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்தார். திருமணத்திற்கு பிறகு சுமார் 1 வருடம் திருவொற்றியூரில் குடியிருந்தோமா என்றால் குடியிருந்தோம் என் அம்மா வீட்டில் குடியிருந்தோம். அவர் 2001ம் ஆண்டு பண்ருட்டி சட்டமன்ற தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார் என்றால் சரி. அவ்வாறு அவர் வெற்றி பெற்ற பிறகு பண்ருட்டியில் நாங்கள் 2006ம் ஆண்டு வரை குடியிருந்தோம் என்றால் வ'ருடம் ஞாபகம் இல்லை ஆனால் குடியிருந்தோம்.2006ம் ஆண்டு தேர்தலில் அவர் அதே தொகுதியில் வெற்றி பெற்றார் என்றால் சரி. அப்போது 2006ல் இருந்து 2011 வரை எண்.4 காமராஜர் தெரு, பண்ருட்டியில் குடியிருந்தோம் என்றால் சரி. ஆகவே என்னுடைய மனுவில் 2001ம் ஆண்டில் எதிர்மனுதாரர் அம்மா குழந்தை இல்லை என்று திட்டியுள்ளதாக கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. திட்டியிருக்கிறார் அடித்து இருக்கிறார். எதிர்மனுதாரர் பூர்வீகம் பண்ருட்டியில் இருந்து சுமார் 30 கி.மீ தூரத்தில் உள்ள புலியூர் காட்டு சாகை என்றால் ஊர் சரிதான் கி.மீ பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருடைய அப்பா அம்மா புலியூர் காட்டு சாகையில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரி. நாங்கள் புலியூர் காட்டு சாகையில் ஒருபோதும் குடியி'ருக்கவில்லை அவ்வப்போது போய் வந்து கொண்டிருப்போம் என்றால் அவ்வப்போது போய் வந்துகொண்டிருப்போம் 1 மாதம் தங்கியிருப்போம். என்னுடைய மனுவில் எந்த மாதம், எந்த தேதியில் என் மாமியயார் என்னை அடித்து திட்டினார் என்றால் அடிக்கடி திட்டியதால் தேதி மாதம் ஞாபகம் இல்லை. பெரும்பாலும் மற்ற அவர்கள் சகோதர்கள் திருமணத்தின் போது பிர்ச்சினை வரும். எதிர்மனுதாரர் சகோதரிர்ன் திருமண சமயத்தில் இது போன்று அவர்கள் திட்டிய விவரத்தை என்னுடைய

மனுவில் கூறியிருக்கிறேனா என்றால் கூறவில்லை. என்னுடைய மனுவிலோ பிரமாண வாக்குமுலத்திலோ எந்த தேதியில் எந்த மாதத்தில் என்னை எதிர்மனுதாரர் அடித்தார் திட்டினார் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எங்களுக்கு இதுவரை குழந்தை பிறக்கவில்லை என்றால் சரி. என்னுடைய மனுவில் டெஸ்ட் டியூப் பேபி மூலம் குழந்தை பெற சிகிச்சை எடுத்து கொள்ளலாம் என்று கேட்டதற்கு எதிர்மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்று நான் கூறிய விவரம் தவறு என்றால் சரியல்ல. 2 முறை பிரசாந்த் மருத்துவமனையில் இந்த சிகிச்சைக்காக நான் அனைத்து என்னிடம் இருந்து கரு ம்ட்டை எடுத்த பிறகு அவர் மருத்துவமனைக்கு வந்து விந்து அணுக்கள் கொடுக்கவில்லை. நான் சொல்வது சரியல்ல என்றாலும் எதிர்மனுதாரர் முழுமையாக ஒத்துழைத்தார் என்றாலும் எதிர்மனுதாரர் தான் நுங்கபாக்கத்தில் உள்ள ஜி ஜி மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்காக அழைத்து சென்றார் என்றாலும் அப்போது பரிசோதனையில் எனக்கு கருப்பையில் நீர்கட்டி இருபபதால் ஐ.வி.எப் முறையில் கருத்தரிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறிவிட்டார்கள் என்றால் ஜிஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் ஆனால் அது போன்று எனக்கு எந்த பிர்ச்சினை இருப்பதாக கூறவில்லை அவர் எனக்கு எந்தவிதத்திலும் ஒத்துழைப்பு செய்யவில்லை. ஜிஜி மருத்துவமனையில் கருத்தரிக்க வாய்பில்லை என்று சொன்னதால் தான் எதிர்மனுதாரர் அவருடைய நண்பரான பாண்டிச்சேரியில் உள்ள சித்த மருத்துவரான டாக்டர் லெனின் என்பவரிடம் என்னை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. ஜி.ஜீ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டிருக்கும் போதே எதிர்மனுதாரர் நண்பர் எங்களுடைய மருத்துவமனையில் நன்றாக சிகிச்சை அளிப்போம் என்று கூறியதால் தான் பாண்டிச்சேரிக்கு சென்றோம். பிரசாந்த் மருத்துவமனையில் டர்கடர்

அரிபிரியாவிடம் என்னை சிகிச்சைக்காக எதிர்மனுதாரர் அழைத்து சென்றார் என்றால் சரி. திருமணத்திற்கு பிறகு குழந்தை இல்லை என்ற மன வருத்தம், மன உளைச்சல் எனக்கு இருந்தது என்றால் மன வருத்தம் இருந்தது மன உளைச்சல் என்ற வார்த்தை ஏதோ சரியில்லை. எதிர்மனுதாரர் 2006, 2011, 2016 ஆண்டுகளில் அவர் தேர்தலில் போட்டியிடும்போது மாற்று வேட்பாளராக என் பெயரை தான் அறிவித்திருந்தார் என்றால் சரி. அவ்வாறு மாற்று வேட்பாளராக அறிவித்தபோது என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் என்னுடைய சொத்து விவரம் அனைத்தும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரி. அது அவர் எழுதி கொடுத்தது தர்ன் அவர் எழுதி கொடுத்ததில் தான் நான் கையெழுத்து போடுவேன். எதிர்மனுதாரர் அவருடைய சுய வருமானத்தில் என்னுடைய பெயரில் காஞ்சிபுரத்திலோ, பண்ருட்டியிலோ சொத்துகள் வாங்கியுள்ளார் என்றாலும் அந்த விவரங்களை தான் அவர் அவருடைய பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளார் என்றாலும் சரியல்ல. பண்ருட்டியில் சொத்து உள்ள விவரம் எனக்கு தெரியாது. காஞ்சிபுரத்தில் இருக்கும் காலி மனை நான் வேலைக்காரியை நிறுத்திவிட்டு மாதம் ருு.500 சேமித்து அந்த பணத்தில் வாங்கினேன். திருவொற்றியூரில் உள்ள வீடு என் அப்பா நான் பிறந்த போது வாங்கிய வீடு . வளசரவாக்கம் வீடு என்னுடைய அப்பா சம்பாதித்து என் பெயரில் எழுதி கொடுத்த வீடு. 2001ம் ஆண்டில் இருந்து நான் அவரை பிரிந்து வந்த 2016 ஆண்டு வரைக்கும் எதிர்மனுதாரர் அவர் பெயரில் ஏதாவது சொத்து வாங்கினாரா என்றால் அவர் பெயரில் வாங்கியிருக்கிறாரா என்று தெரியாது. ஆனால் அவர்கள் அண்ணன் தம்பி பெயரில் வாங்கியிருக்கிறார். 10 ஆண்டுகளாக அவர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்து வந்ததால் கிடைத்த சம்பள பணத்திலும் , அவருடைய குடும்ப பாக பிரிவினையின் அவர் சொத்து வேண்டாம் என்று விட்டு கொடுத்து

பெற்று கொண்ட பணத்தையும் வைத்து தான் வளசரவாக்கத்தில் வீடு வாங்கி என் பெயரில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. இந்த சொத்து என் அப்பா வாங்கி கொடுத்தது. நான் சொல்வது தவறு என்றாலும் என் அப்பா வளசரவாக்கம் வீடு வாங்கி தரவில்லை என்றாலும் வளசரவாக்கம் காஞ்சிபுரம் ஆகிய சொத்துகளை எதிர்மனுதாரர மேற்சொன்னபடி அவருடைய பணத்தில் தான் வாங்கினார் என்றால் சரியல்ல. காஞ்சிபுரத்தில் உள்ள காலி மனையை குலுக்கல் முறையில் மாதம் ரூ.500 கட்டிதான் வாங்கினேன். வளசரவாக்கம் வீடு என் அப்பா தான் வாங்கி கொடுத்தார். என்னுடைய மனுவில் பிப்ரவரி 2017ம் ஆண்டு எதிர்மனுதாரரை பிரிந்து வந்ததாக கூறியிருப்பது தவறு என்றாலும் 2018 வரை நான் அவரோடு தான் சேர்ந்து இருந்தேன் என்றால் சரியல்ல. 2017 ஆண்டே வந்துவிட்டேன். 2017ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கோபிநாத் என்பவரின் திருமணத்திற்கு நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து சென்று வாழ்த்தினோம் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பாத்திரிகை வைத்தார்கள் என்று காஞ்சிபுரத்தில் இருந்து போனேன். அங்க அவர் பக்கத்தில் நின்று போட்டோ எடுத்து கொண்டார். அந்த திருமணம் முடிந்த பிறகு திருவொற்றியூரில் இருக்கும் என் அப்பா வீட்டிற்கு போகாமல் நேராக காஞ்சிபுரம் வந்துவிட்டேன் என்றால் சரி. எதிர்மனுதாரர் அப்பா இறப்பிற்கு நான் போனேனா என்றால் நான் தனியாக சென்றேன். என் மாமனார் இறப்பிற்கு என் அப்பா அம்மாவோடு தான் போனேன் அப்போது வளசரவாக்கத்து வீட்டில் இருந்து போனேனா என்றால் எங்கிருந்து போனேன் என்று சரியாக ஞாபகம் இல்லை. மாமனாருடைய காரியத்திற்கும் என் பெற்றோர் மற்றும் அண்ணன் ஆகியோர் எல்லாம் சேர்ந்து தான் போனோம். எதிர்மனுதாரருடைய அப்பாவின் காரியத்தில் எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட 300 சவரன் நகையும் நான் தான் எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான்

எடுத்துவரவில்லை. நான் எதிர்மனுதாரரை விட்டு நானாக பிரிந்து வரும் வரையில் எதிர்மனுதாரர் என்னை நன்றாக தான் பார்த்துகொண்டார் என்றாலும் சொத்துகள் என் பெயரில் வாங்கி வைத்தார் என்றாலும் மனுவில் கூறியுள்ளது போது அவர் எந்த வகையிலும் துன்புறுத்தவில்லை என்றாலும் எனக்கு குழந்தை பேறுக்கான சிகிச்சைக்கும் அவரே உடன் இருந்து ஒத்துழைப்பு கொடுத்து அழைத்து சென்றார் என்றாலும் என்கது கருப்பையில் நீர் கட்டி இருப்பதால் குழந்தை பெறமுடியாது என்று கூறியதால் அதை கைவிட்டுவிட்டார் என்றாலும் குழந்தை இல்லை என்ற மன உளைச்சலாலும் மன வருத்தினாலும் இந்த விவாகரத்து வழக்கை தாக்கல் செய்தேன் என்றாலும் சரியல்ல. அவர் எந்த சொத்து வாங்கவில்லை. என்னை அடிப்பார் திட்டுவார் எல்லா வகையிலும் துன்புறுத்துவார் நிறைய விசயத்தையும் நான் மனுவில் கூறவில்லை. கோயம்புத்தூர் உள்ள ஈஷா மையத்திற்கு நான் போவது உண்டு என்றாலும் தீவிர பக்தை என்றாலும் சரி. அவர் தான் அதில் என்னை சேர்த்துவிட்டார். எதிர்மனுதாரர் வாங்கி கொடுத்த சொத்துகளை நான் மேற்சொன்ன ஈஷா மையத்திற்கு எழுதி கொடுக்கவேண்டும் என்பதற்காக தான் அந்த ஈஷா மையத்தின் துற்போதனையின் படி தான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அது போன்ற எந்தவித எண்ணமும் எனக்கு கிடையாது. இப்போதும் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறு விசாரணை— இல்லை